**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 59 of 2020

Depositions of PW -6 witness for ________ Prosecution / Defence / Court

Name : கோவிந்தராஜ்

Father's Name : தேவராஜ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of November** 2025.

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் கோவை சிந்தாமணிபுதூரில் குடியிருந்து கொண்டு கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 18.11.2019 ஆம் தேதி மாலை சுமார் 5 முதல் 7 மணிக்குள்ளாக நானும் எனது மாமா நடராஜ் அவர்களும் காரணம்பேட்டை செல்ல காங்கேயன் பாளையம் செக் போஸ்டில் போலீசார் வாகனங்களை நிறுத்தி வாகன தணிக்கை மேற்கொண்டு இருந்தார்கள். பல்லடம் சாலையில் இருந்து சூலூர் வழியாக வந்த SILVER கலர் omni காரை நிறுத்தி போலீசார் விசாரித்தார்கள்.

2. எதிரி அந்த இடத்தில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததை போலீசார் பதிவு செய்தார்கள். மேலும் மேற்படி காரை ஆஜர் செய்ததை போலீசார் கைப்பற்றுதல் அமைச்சரின் கைப்பற்றினார்கள் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி தான் மேற்படி காரை ஓட்டி வந்தார் அவர்தான் என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். போலீசார் என்னை

விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. 18.11.2019 ம் தேதியன்று மாலை 5 முதல் 7 மணிக்குள்ளாக சென்றதாகத்தான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. காலை 5 முதல் 7 மணிக்குள்ளாக சென்றதாகத்தான் சொன்னேன். எதிரியை எங்கு வைத்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் நான் எனது வாகனத்தின் ஆவணங்களை காண்பித்துக் கொண்டிருந்தேன். எதிரி எதிர் திசையில் வந்து கொண்டிருந்தார். அப்பொழுது அவரை போலீசார் நிறுத்தி விசாரணை மேற்கொண்டார்கள். எதிரியை எங்கு உட்கார வைத்து விசாரணை மேற்கொண்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் நிற்க வைத்து தான் விசாரணை மேற்கொண்டார்கள்.

2 என்னிடம் என்னென்ன ஆவணங்களில் கையொப்பம் வாங்கினார்கள் என்ற விபரம் என்னால் சொல்ல இயலுமா என்றால் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் மகசரில் கையொப்பம் வாங்கினார்கள். எதிரியை விசாரித்துக் கொண்டிருந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் நான் நின்று கொண்டிருந்த இடத்திற்கும் சுமார் 10 அடிக்குள் இருக்கும். நான் முதல் விசாரணையில் மாலை நேரத்தில் மேற்படி செக்போஸ்ட் சென்றதாக சொல்லிவிட்டு தற்பொழுது குறுக்கு விசாரணையில் காலை சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.05 18:56:15 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**